www.freetnbooks.com

S

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## வகுப்பு - 12

பதிவு எண் | | | | | | |

## பொருளியல்

கால அளவு: 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி-அ

20×1=20

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) இந்தியாவின் திட்ட குழு அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1947 ஆ) 1950 இ) 1948 ஈ) 1951

2) சாதகமான வணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட ________ ஆக இருக்கும்.
அ) கிட்டதட்ட சமமாக ஆ) அதிகமாக இ) சமமாக ஈ) குறைவாக

3) மிதமான பண வீக்கம் ________ என்று அழைக்கப்படுகிறது.
அ) தவழும் பண வீக்கம் ஆ) நடக்கும் பண வீக்கம்
இ) தாவும் பண வீக்கம் ஈ) ஓடும் பண வீக்கம்

4) ஆர்.பி.ஐ யின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) மும்பை ஆ) டெல்லி இ) பெங்களூரு ஈ) சென்னை

5) ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.
அ) மூலதனம் ஆ) நாடுகளின் செல்வம் இ) பொது நிதி ஈ) பொதுக் கோட்பாடு

6) சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது:
அ) Y/C ஆ) C/Y இ) C+Y ஈ) C×Y

7) இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம்
அ) வெளியிடப்பட்ட விவரங்கள் ஆ) வெளியிடப்படாத விவரங்கள்
இ) மேற்சொன்ன இரண்டும் இல்லை ஈ) (அ) மற்றும் (ஆ)

8) J.B. சே ஒரு
அ) நவீன பொருளியலாளர் ஆ) புதிய தொன்மை பொருளியலாளர்
இ) புதிய பொருளியலாளர் ஈ) தொன்மை பொருளியலாளர்

9) அமில மழை ________ விளைவுகளில் ஒன்று.
அ) நில மாசு ஆ) காற்று மாசு இ) ஒலி மாசு ஈ) நீர் மாசு

10) MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர்
அ) ரிகார்டோ ஆ) ஆடம்ஸ்மித் இ) மால்தஸ் ஈ) J.M.கீன்ஸ்

11) ஒரு வணிக வங்கி செய்யும் வேலை
அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது ஆ) கடன் வழங்குவது
இ) (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்சொன்ன எதுவும் இல்லை

12) GDP குறைப்பான் = ________.
அ) பணமதிப்பு NDP / உண்மை NDP × 100 ஆ) பணமதிப்பு GNP / உண்மை GNP × 100
இ) பணமதிப்பு NNP / உண்மை NNP × 100 ஈ) பணமதிப்பு GDP / உண்மை GDP × 100

13) ________ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலவீத வருமானம் கண்டறியலாம்.
அ) செலவு ஆ) GNP இ) உற்பத்தி ஈ) நாட்டின் மக்கள் தொகை

14) சேயின் சந்தை விதியின் எடுகோள்
அ) குறுகிய கால பகுத்தாய்வு ஆ) முழு வேலை நிலை நிலவும்
இ) நிறைகுறை போட்டி ஈ) குறை வேலையின்மை

15) இரண்டு நாடுகளுக்கிடையிலான வணிகம் என்பது
அ) உள் வாணிகம் ஆ) உள்நாட்டு வாணிகம்
இ) வெளி வாணிகம் ஈ) எவையும் இல்லை

16) புதிய மேம்பாட்டு வங்கி அமைப்புடன் தொடர்புடையது ________.
அ) சார்க் ஆ) பிரிக்ஸ் இ) ஆசியான் ஈ) டபிள்யூ.டி.ஓ

17) பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை
அ) தேவை மற்றும் அளிப்பு ஆ) சொத்து மற்றும் நிலம்
இ) நுண்ணியல் மற்றும் பேரியல் ஈ) உற்பத்தி மற்றும் நுகர்வு

18) இந்திய அரசின் வங்கியாக செயல்படுவது ________.
அ) ICIC ஆ) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
இ) இந்தியன் ரிசர்வ் வங்கி ஈ) நபார்டு

19) நவீன அரசு எனப்படுவது ________.
அ) நலம் பேணும் அரசு ஆ) தலையிடா அரசு
இ) காவல் அரசு ஈ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



20) பதினைந்தாவது நிதி குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு ________.
அ) 2007 ஆ) 2017 இ) 2002 ஈ) 2013

## பகுதி-ஆ

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **7×2=14**

21) பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22) GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.
23) ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?
24) "நுகர்வு நாட்டம்" என்றால் என்ன?
25) வணிக வங்கிகள் என்பதனை வரையறுக்கவும்.
26) அந்நிய செலவாணி (FOREX) என்பதன் பொருள் என்ன?
27) "பொது வருவாய்" என்றால் என்ன?
28) உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறுக்கவும்.
29) புள்ளியியல் என்றால் என்ன?
30) நெம்புகோல் இயக்க விளைவு என்றால் என்ன?

## பகுதி-இ

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடை அளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **7×3=21**

31) தனிமனிதர் வருமானத்திற்கும், செலவிடக் கூடிய வருமானத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?
32) நவீன அரசின் பணிகள் யாவை?
33) நேர்முக மறைமுக வரிகளுக்கு இடையேயான வேறுபாடுகள் எவையேனும் மூன்றினை கூறுக.
34) வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
35) இ-கழிவு என்பதன் பொருள் கூறுக.
36) சார்கின் பணிகளைச் சுருக்கமாக கூறுக.
37) நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?
38) வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.
39) பல்வகையான உடன் தொடர்புகளை கூறி விளக்குக.
40) வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் குறிப்பு வரைக.

## பகுதி-ஈ

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்க:

41) அ) முதலாளித்துவம், சமத்துவம் மற்றும் கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக. **(அல்லது)**
ஆ) தேசிய வருவாயை கணக்கிடும் பல்வேறு முறைகளை விளக்குக.

42) அ) வேலையின்மைகளின் வகைகளை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

43) அ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக. **(அல்லது)**
ஆ) தொன்மை கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

44) அ) பணத்தின் பணிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) உள்நாட்டு வாணிகத்திற்கும், பன்னாட்டு வாணிகத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.

45) அ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

46) அ) வணிக சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க. **(அல்லது)**
ஆ) ஜோக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வணிக வீத வகைகளை விவரிக்க.

47) அ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியார்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் X-ன் தேவை | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| பொருள் Y-ன் விற்பனை | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

**(அல்லது)**

ஆ) பொதுநிதியின் எல்லைகளை விளக்குக.

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS